செய்திக் குறிப்பு எண் : 1 நாள் : 08.1.2010

<u>வேளாண்மைத் துறை அமைச்சர் அலுவலகம்</u>

<u>பத்திரிகைச் செய்தி</u>

<u>தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்குதல்.</u>

**2008 நவம்பர் மாதத்தில் நிஷா புயலினால் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களுக்கு 2008–09 ஆம் ஆண்டில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டு தொகையாக பயிர் காப்பீட்டு கழகத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூ.651.66 கோடியில் மாநில அரசின் 50 சத பங்கான ரூ.306.477 கோடி மற்றும் இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு கழகம் வசூலித்த பிரிமீயத் தொகையில் 50 சதமான ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.325.83 கோடி பாதிக்கப்பட்ட 20 மாவட்டங்களில் 5,36,352 விவசாயிகளுக்கு அக்டோபர் மாதம் முதல் தவணையாக வழங்கப்பட்டது.**

**மத்திய அரசு தனது 50 சத பங்கான ரூ. 306.477 கோடி மற்றும் இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு கழகத்திடம் உள்ள மீத பிரிமீயத் தொகையான ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.325.83 கோடியில் முதல் கட்டமாக ரூ.65.17 கோடி விடுவித்ததை புதுக்கோட்டை, கடலூர், சிவகங்கை, திருச்சி, மதுரை, திருவண்ணாமலை, விருதுநகர், காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர், கரூர், திருவள்ளூர், சேலம், கிருஷ்ணகிரி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களுக்கு இழப்பீடு தொகை முழுமையாகவும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய மத்திய அரசின் பங்கான ரூ.24.53 கோடியில் ரூ.22.02 கோடியும் வழங்கப்பட்டது.**

மத்திய அரசு அளிக்க வேண்டிய மீதத் தொகையான ரூ.260.66 கோடியில் ரூ.131.595 கோடியை தற்போது விடுவித்துள்ளது. இதில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய எஞ்சியத் தொகையான ரூ.2.51 கோடியை முழுமையாகவும், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு ஏற்கனவே மாநில அரசின் பங்கான 50 சதவீதம் வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது நிலுவையில் உள்ள மத்திய அரசின் பங்கான ரூ.258.17 கோடியில் 50 சதத் தொகையான ரூ.129.085 கோடியை பொங்கலுக்கு முன் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதனால் 4,33,926 விவசாயிகள் பயன் பெறுவர். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய மீதித் தொகை மத்திய அரசு விடுவித்தவுடன் வழங்கப்படும். என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

8.1.2010

வேளாண்மைத் துறை அமைச்சர்
தலைமைச் செயலகம், சென்னை-600 009

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

2/2